Press No. 12 Date : 04/10/2016

தருமபுரி மாவட்டம்

**<u>தருமபுரி மாவட்டம், பாப்பாரப்பட்டியில் தியாகி சுப்ரமணியசிவாவின் 133-வது பிறந்த நாள் விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினார்.</u>**




தருமபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டம், பாப்பாரப்பட்டியில் தியாகி சுப்ரமணியசிவாவின் மணி மண்டபத்தில் அவரது 133-வது பிறந்த நாள் விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு அவரின் திருவுருவ படத்திற்கு மாலையிட்டு மரியாதை செலுத்தினார்.

பின்னர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது :-

தியாகி சுப்ரமணியசிவா அவர்களின் 133-வது பிறந்த நாள் விழா இன்று அனுசரிக்கப்படுகிறது. தியாகி அவர்கள் தனக்கென வாழாமல் இந்த நாட்டிற்காகவும், சுதந்திரத்திற்காகவும் மிகவும் பாடுபட்டவர். அவரை நம் முன் உதாரணமாக கொண்டு வாழ்க்கையில் மேம்படுத்திக்கொள்ள வேண்டும். தியாகி அவர்கள் தேசபற்று கொண்ட வாழ்க்கையை வாழ்ந்துள்ளார். தன்னலமற்ற அவரது வாழ்க்கையை நாமும் பின்பற்றி நம் தேசத்திற்கு அரும்பணியாற்ற வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப.,அவர்கள் தெரிவித்தார்.

இவ்விழாவில் தருமபுரி வருவாய் கோட்டாட்சியர் திரு. ராமமூர்த்தி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு. மீ. செல்வகுமார், வட்டாட்சியர் திரு. மணி, உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி) திரு. சதீஷ், உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (விளம்பரம்) திரு. ஜனார்த்தனன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தருமபுரி.